திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, இந்தக் கல்வியில், உதாரண மாக விவசாயம் என்று எடுத்துக்கொண்டால், அதிலே நேச்சுரல் சயின்ஸ் ஆறு பாடவேளைகள் போதிக்கவேண்டியிருக்கிறது. அப்படி போதிக்கப்படும் போது, அவர்கள் முதுகலைப் பட்டதாரிகளாக இருந்தாகவேண்டியிருக் கிறது. ஆகவே அவர்களுக்காவது இந்த முதுநிலை ஊதியம் வழங்க முன்வர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அத்தகைய பாடங்களைச் சொல்லித் தருகிற ஆசிரியர்களின் நிலைகுறித்து, இந்தப் படிப்புதான் இருக்க வேண்டுமென்று இருந்தால், அப்போது இந்தச் சம்பள விகிதத்தைக் கொடுக்கலாம். அப்படிப்பட்ட தகுதி இருக்க வேண்டும் என்று நாம் முடிவு செய்ய வேண்டும். அப்படி முடிவு செய்யாமல், இப்படிப்பட்ட சம்பளம் தருவதற்கில்லை. ஆனால் அவர்களைப் பொறுத்தவரையில், அரசு ஒரு முக்கியமான யோசனையைச் செய்துகொண்டிருக்கிறது. சிறப்பூதியம் பெற 24 பாடவேளைகள் இருக்கவேண்டுமென்று இப்போது விதியிருக்கிறது. அதற்குப் பதிலாக பள்ளிக் கல்வி இயக்குநர் இந்தச் சிறப்பூதிய பாடவேளை நிபந்தனையை நீக்கியதோடு, சிறப்பூதியம் பெறமுடியாது இருந்த தேதியி லிருந்து சிறப்பூதியம் பெறுவதற்கேற்ற வகையில் அரசு ஆணை வெளியிட இருக்கிறது. இது ஒரு முக்கியமான ஒன்றாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஏனைய பிரிவு ஆசிரியர்களுக்கு ரூ. 25 லிருந்து ரூ. 40 ஆக உயர்த்திய அந்த நாளிலிருந்து அவர்களுக்கும் அளிக்குமாறு அரசு ஆணை வெளியிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதைத் தான் இப்போது சொன்னேன். ஊதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட பாட வேளை நிபந்தனையை நீக்கியதோடு புதிய பிரிவு ஆசிரியர்கள் பெற வழி இல்லாததால், அப்படிப் பெற முடியாத நாளிலிருந்து அவர்கள் சிறப்பூதியம் பெற ஆணை இடப்படவிருக்கிறது.

பகுதிநேர தொழிற் பாட ஆசிரியர் ஊதியம்.

*105. வினா—திரு. க. அருணாசலம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்களுக்கான (Vocational) பகுதிநேர ஆசிரியர்களாகப் பணி புரிபவர்கள் ஊதியத்தை ரூ. 150-லிருந்து உயர்த்திட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு, இதுகுறித்து, பரிசீலிக்கும்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, இரண்டு பகுதி நேர ஆசிரியர்களும் சேர்ந்து ரூ. 300 வாங்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் பத்து பாட வேளை இருந்தால்தான், ஒரு பகுதி நேர ஆசிரியர் பணிக்கு ரூ. 150 ஊதியமாக வழங்கப்பட வேண்டும் என்று ஆணை உள்ளது. அதையடுத்து ஒரு பாட வேளையை உடற் பயிற்சிக்காக ஒதுக்கிட வேண்டும் என்று அரசு ஆணையிட்டதன் காரணமாக பத்து பாட வேளையாக இருந்தது தற்போது ஒன்பது பாட வேளையாகக் குறைந்துள்ளது. எனவே இரண்டு பகுதி நேர ஆசிரியர்கள் இருக்கிற இடங்களில் 18 பாட வேளைகளாகக் குறைந்துள்ளன. இதன் காரணமாக ஒரே ஒரு பகுதி நேர ஆசிரியருக்கான ஊதியமான ரூ. 150 மட்டுமே வழங்குகிறார்கள். எனவே இந்த நிலைமையைத் திருத்தி ஒன்பது பாட வேளையாக இருந்தாலும் - அது கல்வித் துறையின் ஆணைக்கேற்ப குறைக்கப்பட்ட காரணத்தால் - இரண்டு பகுதி நேர ஆசிரியர்களுக்கும் ரூ. 300, அதாவது ஒவ்வொருவருக்கும் ரூ. 150 என்ற அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்ற ஆணையை அரசு வெளியிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ் எழுத்துக்கள்

*106. வினா—**திரு. பா. ரா. தாமஸ் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் எழுத்துக்களை, இயந்திரங்களில் எளிதாகப் பயன்படுத்தும் பொருட்டு, தமிழ் எழுத்துக்களின் வரி வடிவங்களை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?